1970 மார்ச் 28]

கேட்டதற்கு, முடியாது என்று அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி கூட்டுறவு சங்கத்தின் மூலமாகச் செய்யவேண்டும் என்று சொன்னுல், விவசாய இலாகாவின் மூலமாக, அந்த இலாகாவிற்கு கடன், கட்டடங்கள் கொடுத்து செய்யும்போது, ஒப்பளிப்பு ஒன்றுமே அவசியம் இல்லே என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து, மீண்டும் வலியுறுத்தி உதவி தரவேண்டும் என்று இப்பொழுது கடிதப் போக்குவரத்து நடக்கிறது.

திரு. ஜெ. கருணைநாதன் : தலைவர் அவர்களே, உருளேக்கிழங்கு அழுகும் பொருள். ஆகவே, குளிர்ப்பதன சாதனம் அவசியமாகிறது. ஆகவே, மத்திய சர்க்காரை வலியுறுத்தும்போது, நீலகிரி மாவட்டத்திற்கு அதை விஸ்தரிக்க முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முதலிலே கொடைக்கானலில் நிறைவேற்றுவோம். அதன் பிறகு நீலகிரிக்கு வருவோம்.

THIRU B. VENKATASWAMY : Simla variety of potato is best suited for seed purposes for Hosur taluk. Now we are importing varieties like 'President, Kuprikuber and Chandramukhi' at high cost. Will the Government think of installing a cold storage plant to store seeds locally purchased and if so, when the work on the same will be started?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய சர்ககார் கொடைக்கானலில் ஏற்படுத்தியிருந்த அந்த குளிர்ப்பதன சாதனத்தைப் பற்றியது கேள்வி. மாநில அரசாங்கம் பல இடங்களில் குளிர்ப்பதன சாதனங்கள் வைக்க திட்டம் இருக்கிறது. அந்த வகையில்தான் ஹோசூரில் வைக்கக் கவனிக்கப்படும்.

Aerial spraying of pesticides

* 578 Q.—THIRU K. SAHADEVA KANDER: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Government's programme of aerial spraying of pesticides has been stopped in Thanjavur District for the present; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லே. 1969–70–ம் ஆண்டில் விமான மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

(ஆ) இவ்வினுவிற்கு இடமில்லே.

திரு. கே. சகாதேவக் கண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, விமான மூலம் மருந்து தெளிக்கும்போது, குறிப்பாக கர்ப்பஸ்த்ரீகளுக்கு பாதகம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறதே. பாதகம் உண்டாகிறதா ? அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட பாதகம் இல்லே என்று முற்றிலும் உணர்ந்த பிறகுதான், தெளிப்பான்களுக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. சந்தேகப்படவேண்டிய அவசியம் இல்லே.

திரு. சோ. அழகர்சாமி : விமான மூலம் மருந்து தெளிக்க செலவு என்ன ஆகிறது? விவசாயிகளிடம் ஒரு ஏக்கருக்கு எந்த அளவில் வசூலிக்கப் படுகிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட பணம் ஒரு ஏக்கருக்கு ரூ. 5.98 புதுக்காசு என்ற விகிதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு காலமாக கொஞ்சம் அரசாங்கமே மானியத் தொகை கொடுத்து வந்தது. அதைப்பற்றி இப்பொழுது யோசித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்க மானியம் கொடுத்ததை நிறுத்தியிருக்கிறது என்று தெரிகிறது. மீண்டும் மானியத் தொகையை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நிறுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். அது மறுபரிசீலனையில் இருக்கிறது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, சமீபத்திலே தஞ்சாவூர் ஜில்லாவில் விமானம் மூலம் மருந்து தெளித்தபோது, விமானிக்கு ஆபத்து ஏற்பட்டு இறந்துவிட்டாரே, அவருக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விமானம் மூலம் மருந்து தெளிப்பதில், அரசாங்கமே செய்வது இல்லை. தனிப்பட்ட கம்பெனிக்காரர்களோடு ஒப்பந்தம் செய்கிறோம். டெண்டர் கொடுத்துத்தான் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். பைலட் இறந்துவிட்டார் என்றால், அந்தக் கம்பெனிக்காரர்தான் தரவேண்டும். அரசாங்கம் தரவேண்டும் என்று இல்லை. அவர்கள் நிச்சயமாக இன்ஷூர் செய்திருப்பார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, விமானத்தின் மூலம் பூச்சி மருந்துகளைத் தெளிக்கிறபோது, குறிப்பிட்ட ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலங்களுக்கு மட்டும்தான் பூச்சி மருந்து தெளிக்கப்படுகிறது. இதனால் பக்கத்தில் இருக்கிற நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, பக்கத்து நிலக்காரர்கள் ஒப்புதல் தந்தாலும், தராவிட்டாலும் அரசாங்கமே எல்லா நிலங்களுக்கும் பூச்சி மருந்தை தெளித்துவிட்டு, அதற்குரிய கட்டணத்தை நிலவரியோடு சேர்த்து வசூலிக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. இப்போது குறைந்த நிலம் வைத்திருப்பவர்கள் கூட இதன் அவசியத்தை உணர்ந்து விமானத்தின் மூலம் பூச்சி மருந்தை தெளிக்க வேண்டுமென்று அரசாங்கத்தையும், பஞ்சாயத்தையும் கேட்டுக்கொள்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிலைமை வரவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலம்பாடி கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*579 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமராட்சி யூனியனைச் சேர்ந்த அத்திப்பட்டு பஞ்சாயத்திலுள்ள ஆலம்பாடி கிராமத்து அரிசனங்களுக்கு மனைகள் வழங்கும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : 1960–ம் ஆண்டு தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம் அத்திப்பட்டு கிராமத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு 2·90 ஏக்கர் அரசாங்க புஞ்சை, நஞ்சை நிலம் கையகப்படுத்தப்பட்டது. மேற்படி கிராமத்தில் வீடில்லா 53 அரிசனங்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டு பட்டாக்களும் அளிக்கப்பட்டன.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு பட்டா வழங்குவதில் அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை என்ன ? முன்பு பட்டா வழங்கப்பட்டிருக்கிற அரிசனங்கள் வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியாமல்